IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.
**OS.No. 112/2017**

| DEPOSITION OF WITNESS | DW.3 |
|---|---|

| NAME | சரவணன் |
|---|---|

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of **06.08.2024**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி**

1. வா.சா.ஆ.2 ல் உள்ள 2008 குறிப்புக்களை உள்ள ஆவணங்களை சரிபார்த்துவிட்டு வருவதாக நேரம் கேட்டு சென்றுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 எனது அலுவலகத்தில் தான் பதிவு செய்தது. Ex.X5–ல் ஏன் என்ட்ரி ஆக வில்லை என்றால் முழு சர்வே எண்ணை போடாததால் அதில் என்ட்ரி காட்டவில்லை போட்டால் அது காண்பிக்கப்படும்.

2. நான் தாக்கல் செய்யும் வில்லங்கசான்றிதழில் என்ட்ரி உள்ளது அதை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன், அதை Ex.X6 ஆக 2 வது மற்றும் 3 வதாக பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞரின் ஆட்சேபனையுடன் தாக்கல் செய்துள்ளேன். Ex.X6 ல் 2 வதாக வரும் குறிப்பில் சீனன் என்பவர் முனிரத்தினம் என்பவருக்கு கிரையம் ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார்.

3. 13.06.2013 ல் முனிரத்தினம் என்பவர் எஸ்.சரஸ்வதிக்கு கிரையம் ஆவண எண்.5519/2013 என்ற ஆவண படி எழுதி கொடுத்துள்ளார். 01.06.2017 அன்று முனிரத்தினம் என்பவர் திருமதி உஷாவிற்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி கொடுத்துள்ளார். அதில் சர்வே எண்.48/1 ஏ மற்றும் 49/2 ஏ முதலாவது அட்டவணை 23 –1/2 செண்ட் 2 வது அட்டவணை சொத்தில் 39–1/2 செண்ட் ஆகும். முனிரத்தினம் எனபவர் சரஸ்வதிக்கு கொடுத்த கிரயப்பத்திரத்தில் 12/ஏ 1 அவை 20 செண்ட் ஆகும்.

4. சீனன் முனிரத்தினத்திற்கு கொடுத்த சொத்தின் சர்வே எண்.12/1 ஏ 1, 48/1 ஏ, 49/2 ஏ விஸ்தீரணம் 1 ஏக்கர் 92 –1/2 செண்ட், 23–1/2 செண்ட், 39–1/2 செண்ட். வா.சா.ஆ.2 சீனன் முனிரத்தினத்திற்கு எழுதி கொடுத்த ஆவணம் ஆகும். பதிவு செய்த போது விற்பவர் மற்றும்

வாங்கபவரின் அடையாள அட்டையை சரிபார்த்து பின்பு அவர்களது புகைப்படத்தை பெற்றுக்கொண்டு அதை சரிபார்த்து பின்புதான் சார்பதிவாளர் கையொப்பம் செய்வார் என்றால் சரிதான். அதேபோல் தான் இடதுகை பெருவிரல் ரேகையை பதிவு செய்வார்கள் என்றால் சரிதான்.

5. மேற்சொன்ன ஆவணங்கள் குறித்து ஏதேனும் ஆட்சபேனை ஆவணம் போலியானது என்று ஏதேனும் அறிவிப்பு கடிதம் வந்ததா என்றால் இல்லை. Ex.X6 ல் 3 வது மற்றும் 4 வது பதிவான 2013 மற்றும் 2017 ல் பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் தாய்பத்திரமான 9038/2008 பத்திரத்தை பார்த்து சரிபார்த்து பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான்.

**2 வது மற்றும் 3 வது தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி Ex.X5 மற்றும் Ex.X6 ல் உள்ள விடப்பட்ட விடயங்கள் குறித்து மட்டும் மறு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

1. Ex.X5 ல் சர்வே எண்.48, 49, 44, 12 சர்வே எண்ணுக்கு உட்பட்டது. Ex.X6 ல் சர்வே எண்.48, 49, 12 சர்வே எண்ணுக்கு உட்பட்டது. 2 லும் 50 வருடத்திற்கான தேடுதல் என்றால் சரிதான். 2 லும் அட்டாச்மெண்ட்டுக்கு செய்யப்பட்ட குறிப்புகளுக்காக மட்டும் தேடப்பட்டது அல்ல.

நீதிமன்ற கேள்வி: Ex.X5 ற்கும், Ex.X6 ற்கும் இரண்டிற்கும் சர்வே எண்கள் ஒரே சர்வே எண்ணில் தான் வில்லங்கசான்றிதழ் தேடப்பட்டது. எப்படி Ex.X6 ல் புதியதாக இரண்டு என்ட்ரிகள் வந்தது என்றால் நான் முதலில் நீதிமன்றத்தில் உள்ள அட்டாச்மெண்ட் பதிவுகள் மட்டுதான் எடுத்துவந்துள்ளேன். Ex.X5 ல் சர்வே எண்.48, 49, 44 12 ல் உள்ள 50 வருடத்திற்கான வில்லங்க சான்றிதழை தேடும் போது அட்டாச்மெண்ட் செய்யப்பட்டதற்கான ஒரே பதிவு மட்டுதான் காணப்பட்டுள்ளது.

Taken down by me in open court read over of the deponent and acknowledged by her/him to be correct.

Sd/.M.N.Rajanandhivarmasiva,
District Munsif,
Gudiyattam.